No:54:01 Price: Rs.10.00

Herald of Deliverance

விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

JANUARY 2010



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை...!

அன்பான தூதன் வாசர்களுக்கு,

எனது உளமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முழுவதும் கர்த்தர் நம்மோடிருந்து, நமக்கு ஏற்பட்ட சோதனைகள், வேதனைகள், பாடுகள் ஆகிய எல்லாவற்றிலும் புதிய, புதிய கிருபைகளைத் தந்து, நாம் வெற்றியோடும் மகிழ்ச்சியோடும் இப்புத்தாண்டைச் சந்திக்கச் செய்த கிருபைகளுக்காக, துதி, கனம், மகிமை அவருக்கே உண்டாவதாக.

"தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்" (சங்கீதம் 147:11).

இப்புத்தாண்டிலும் நாம் அவருக்குப் பயந்து, அவருடைய கிருபைகளுக்காக அவரது பாதபடியில் அனுதினமும் காத்திருப்போம். அப்போது, அவர் நம்மைக்குறித்துள்ள தமது திட்டங்களைப் பிரியத்தோடு நம்மில் நிறைவேற்றுவார். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து நமக்கு ஒத்தாசைவரும்.

"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி" (ஏசாயா 58:11) என்றுள்ள வாக்கை அனுதினம் பற்றி நடப்போம். நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றாகவும் நமது வாழ்வை அவர் இவ்வாண்டு வளமாக்குவார்.

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (லூக்கா 9:23) என்று வேதம் கூறுகிறது.

ஆம், நம் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அமைந்த சிலுவைப்பாதை என்று ஒன்றுண்டு. எபிரெயர் 2:15 இன்படி, நமக்காகப் பரிதபிக்கும் பிரதான ஆசாரியராக நமது இயேசு நம்மோடிருப்பதால், நமது அனுதின சிலுவையைச் சுமக்கவும், சகிக்கவும் அவர் பெலன் தந்து, இவ்வாண்டு முழுவதும் நம்மை நடத்துவார்.

"நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு" (நீதி.23;17) என்ற வாக்கிற்கிணங்க, இவ்வாண்டு முழுவதும் நமது தேவ பக்தியும், தேவ பயமும் நாடோறும் அதிகப்படட்டும். "இயேசுவே மெய்த்தெய்வம்" என்று அறைகூவுமாறுள்ள வாழ்க்கை வாழுவோம். ஆத்துமாக்களை இயேசுவண்டை கூட்டிச் சேர்ப்போம்.

அன்பானவர்களே! இவ்வாண்டு திராட்சச் செடியாகிய இயேசுவில் அமைந்த கொடிகளாகக் காணப்படுங்கள். அப்போது, அவருக்கென மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள். மட்டுமன்றி, இயேசுவின் இனிமையான சுபாவங்களைப் பிரதிபலிப்பீர்கள். அதனால், ஆத்துமாக்கள் இயேசுவண்டை ஈர்க்கப்படுவார்கள்.

கர்த்தர்தாமே இவ்வாண்டு முழுவதும் உங்களோடிருந்து, தாம் உங்களுக்காக வைத்திருக்கும் சுதந்தரங்களை நீங்கள் பெற்று வாழ, உதவி செய்வாராக.

அன்புள்ள

R. K. Sam

இப்புத்தாண்டில்

இயேசுவே நமது போதகர்

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

இவ்வுலகில் அநேகர் அவதரித்து, தங்களது நற்போதனைகளை மக்களுக்குப் போதித்தனர். ஆனால், அவையனைத்தும் இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கு இணையாகாது. ஏன்? அவ்வவதாரங்கள் தாங்கள் போதித்தவைகளைச் சாதித்துக் காட்டியதில்லை. இயேசுவோ, தாம் போதித்த வைகளைத் தமது வாழ்க்கையில் சாதித்துக் காட்டினார். ஆகவே, நமது இயேசு கிறிஸ்து ஈடு, இணையற்ற ஒரு போதகர்.

"ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்" (நீதி.11:14) என்று வேதம் கூறுகிறது. ஆகவே, நமக்கு நல் ஆலோசனை களைக் கூறி, நல்வழிப்படுத்தும் போதகர்கள் தேவை. *"கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்"* (மத்தேயு 23:8). *"நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்"* (யோவான் 13:13) என்று இயேசுதாமே கூறியுள்ளதால், அவரைத்தவிர வேறு போதகர் நமக்கு இல்லை என்பது உறுதி. இந்த 2010 ஆம் ஆண்டில், இயேசு கிறிஸ்து நமக்குப் போதகராயிருந்து, நம்மை வழிநடத்துவார். அவர் நல்ல போதகர். *"நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்"* (சங்கீதம் 32:8) என்று கூறுகிறார்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் போதகராக ஏற்று, இவ்வாண்டு முழுவதும் வாழ்வோம். அவர் எவ்வெவ் விதங்களில் நமக்குப் போதகராயிருந்து, வழிநடத்துவார் என்பதைக் கீழே காண்போம்.

அன்புள்ளம் படைத்த போதகர் இயேசு

"இவைகளைச் சொன்னபின்பு, அவள் போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக் கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள். அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில் வந்தாள்" (யோவான் 11:28, 29).

லாசரு மரித்து, அடக்கம்பண்ணப்பட்ட பின்புதான், இயேசு கிறிஸ்து அவளது சகோதரிகளான மார்த்தாளையும், மரியாளையும் காணச்சென்றார். *"போதகர்... உன்னை அழைக்கிறார்"* என்று சொன்ன மார்த்தாளின் சொல் கேட்டு, மரியாள் சீக்கிரமாக எழுந்து அவரைக் காணச் சென்றாள். அவர் அன்பு மிகுந்தவர்; கரிசனை கொண்டவர் என்பதை மரியாள் அறிந்திருந்தாள். தன்னுடைய போதகரைச் சந்தித்தாலே தனது பிரச்சினை களுக்கும், தனது கண்ணீருக்கும், கவலை களுக்கும் ஒரு முடிவு வருமென்பதையும் அவள் தெரிந்திருந்தாள். உலகில் படித்தவர் களும் பண்புடையவர்களும் அநேகரிருந் தாலும், இயேசுவைப்போல அன்புடையவரும், இரக்கமுடையவரும், கரிசனை கொள்பவரும், புரிந்துகொள்பவரும் ஒருவரும் இல்லை.

போதகரான இயேசு, ஆவியிலே கலங்கித் துயரமுற்றவராய், லாசருவைக்

குறித்து விசாரித்து, கல்லறையினருகே சென்று, அவனை உயிரோடு எழுப்பினார். அவருடைய அன்புதான்—கரிசனைதான்—என்னே, என்னே! **ஆம், அன்பானவர்களே! இப்புத்தாண்டில், போதகரான இயேசு கிறிஸ்து ஏற்ற நேரத்தில் உதவ, உங்கள்மீது அன்பும், கரிசனையும் காட்டுவார்.**

சூழ்நிலைகளை அமைதிப்படுத்தும் போதகரான இயேசு

"அன்று சாயங்காலத்தில், அவர் அவர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார். அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள். வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது. அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று" (மாற்கு 4:35-39).

இயேசு கிறிஸ்து தமது சீடர்களோடு அக்கரை நோக்கிப் படகில் பயணம் சென்றபோது ஏற்பட்ட சுழற்காற்றைக்குறித்து, இங்குக் காண்கிறோம். இயேசுவோ, கப்பலின் பின்னணியத்தில் நித்திரையாயிருந்தார். சீடர்கள் இயேசுவை எழுப்பி, *"போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா?"* என்றனர். அவர் எழுந்து காற்றை அதட்டி, கடலைப் பார்த்து, *"இரையாதே, அமைதலாயிரு"* என்றார். உடனே, காற்று நின்றுபோய் மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

அன்பானவர்களே! இப்புத்தாண்டிலும் இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்வில் ஏற்படும் சுழல்காற்றைப் போன்ற எல்லாச் சஞ்சலங்களிலும் சூழ்நிலைகளிலும், போதகராக விளங்குவார். வாழ்வின் எல்லாக் கொந்தளிப்புகளையும் அகற்றி, அமைதிப்படுத்துவார். **அமைதிப் படுத்தும் போதகர் உங்களோடுகூடவே வருவதால் தைரியப்படுவீர்களாக.**

அற்புதங்களைச் செய்யும் போதகர் இயேசு

*"அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த **போதகர்** என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்"* (யோவான் 3:2).

யோவான் 2:23 இல், பஸ்கா பண்டிகையின்போது இயேசு கிறிஸ்து எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களைக் கண்ட அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தனர். இதனை நிக்கொதேமுவும் அறிந்ததினால், மேற்காணுமாறு அவன் இயேசுவிடம் கூறினான். ஆம், இயேசு கிறிஸ்து அற்புதர்; அற்புதங்களைச் செய்கிறவர். மாற்கு 9:17 முதல் 26 வசனங்கள் வரை வாசித்தறியவும்.

ஜனக்கூட்டத்திலிருந்து வந்த ஒருவன் இயேசுவை நோக்கி, *"போதகரே, ஊமையான ஆவி பிடித்திருக்கும் என் மகனைச் சுகமாக்கும்படி உம்மிடத்தில் வேண்டுகிறேன்; உம்முடைய சீஷரிடத்தில் அவனைக் கொண்டு வந்தபோது, அந்த அசுத்த ஆவியைத் துரத்திவிட, உம்முடைய சீஷர்களால் கூடாமற்போயிற்று என்றான். அப்போது இயேசு அந்த ஆவியை நோக்கி, "ஊமையும் செவிடுமான ஆவியே, இவனைவிட்டுப் போ" என்று துரத்தினார். அந்த ஆவி அவனை மிகவும் அலைக்கழித்து, அவனைவிட்டுப் போயிற்று."* **ஆம், நம்முடைய**

போதகரான இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்கிறவர். இந்தப் புத்தாண்டில் அவர் உங்களுக்குப் போதகராக விளங்கி, அற்புதங்களையும் அதிசயங்களையும் உங்களது வாழ்வில் செய்யப்போகிறார். விசுவாசியுங்கள்.

ஆறுதல்படுத்தும் போதகர் இயேசு

"இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்" (யோவான் 20:14-16).

இயேசு கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்ட மூன்றாம் நாளில் கல்லறைக்குச் சென்ற மகதலேனா மரியாள், இயேசுவின் சரீரத்தைக் கல்லறையில் காணாமல் அழுதுகொண்டிருந்தாள். தன்னருகில் நின்ற இயேசுவைத் தோட்டக்காரனென்றெண்ணி, *"ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை (அந்த மரித்த சடலத்தை) எடுத்துக் கொள்ளுவேன் என்றாள்."*

இயேசு அவளை நோக்கி, *"மரியாளே"* என்றழைக்க, தம் போதகரின் அன்பின் குரலை அறிந்த அவள் *"ரபூனி"* என்றாள். 'ரபூனி' என்றால் 'போதகர்' என்று பொருள். இயேசு அவளைத் தேற்றி, ஆறுதல்படுத்தினதை இங்குக் காணமுடிகிறது. ஆம், அவர் ஆறுதல்படுத்தும் போதகர்தான். *"இனி நீ அழுது கொண்டிராய்; உனக்கு மறு உத்தரவு அருளுவார்... உன் போதகர்கள் இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட்டார்கள்; உன் கண்கள் உன் போதகர்களைக்காணும்"* என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறியுள்ளார். *'போதகர்கள்'* என்ற பன்மை சொல், *'போதகர்'* என்ற ஒருமை சொல்லாகவே மூலபாஷையில் காணப்படுகிறது.

அன்பானவர்களே! இப்புத்தாண்டு முழுவதும் ஆற்றித் தேற்றும் போதகர் உங்களுடனேகூட எப்போதும் இருந்து, உங்களை ஆசீர்வதிப்பார். விசுவாசிப்பீர்களாக.

மறுரூபப்படுத்தும் போதகர் இயேசு

"ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்" என்று யோவானின் சீடர்கள் கேட்டார்கள்; ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம். அவர்: வந்து பாருங்கள் என்றார்... அன்றையதினம் அவரிடத்தில் தங்கினார்கள்" (யோவான் 1:38,39).

யோவான்ஸ்நானனின் சீஷர்களில் இருவர் இயேசுவைப் பார்த்துக் கேட்ட கேள்வி இது. இவ்விருவரில் ஒருவன் அந்திரேயா. அவன் தன் சகோதரனான பேதுருவைக் கண்டு, *"மேசியாவைக் கண்டோம்"* என்று கூறினான் (யோவான் 1:41). போதகரோடு ஒரு நாள் தங்கின அந்திரேயாவின் மனம் மறுரூபமானது. அவன் கண்ட மேசியா, "கிறிஸ்துவே" என்று அறிந்துகொண்டான். பழைய அந்திரேயா புதியவனாக மாற்றப்பட்டான்; அதனால், தன் சொந்த சகோதரனுக்குக் கிறிஸ்துவை அறிமுகப்படுத்தினான். பேதுரு இயேசுவை ஏற்றுக் கொண்டது அந்திரேயாவால்தான்.

ஆம், அன்பானவர்களே! இப்புத்தாண்டில் போதகராய் விளங்கும் இயேசு கிறிஸ்து,

உங்களை மறுரூபப்படுத்துவார். அதனால் உங்கள் நடக்கைகள் மாறும். உங்களது மாமிசீக குணங்கள் மாறும். நீங்கள் புதிய மனிதனாக மாறுவீர்கள். உங்களது வாழ்வைக் கண்டு, அநேகர் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வர். **போதகரான இயேசு, இவ்வாண்டில் உங்களைத் தம்முடைய சாயலைப் பெற்று வாழச் செய்வார். அல்லேலூயா!**

உங்களோடு ஐக்கியம் பாராட்டும் போதகர் இயேசு

"ஆறுநாளைக்குப்பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, உயர்ந்த மலையின்மேல் அவர்களைத் தனியே கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அப்பொழுது மோசேயும் எலியாவும் இயேசுவுடனே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ரபீ, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்" (மாற்கு 9:2,4,5).

உயர்ந்த மலைக்குச் சென்ற சீஷருள் ஒருவனான பேதுரு கூறின கூற்றை 5 ஆம் வசனம் கூறுகிறது. அம்மூவரும் இயேசுவில் ஐக்கியங்கொண்டு இன்பத்தில் திகழ வாஞ்சிப்பதாகப் பேதுரு கூறினான். ஆம், இயேசு கிறிஸ்துவோடு நெருங்கி, ஐக்கியங் கொண்டு வாழும் பாக்கியத்தைத் தவிர, வேறோர் பாக்கியம் இவ்வுலகில் இல்லை. அவர் முகத்தைக் காண்பது, அவரோடு பேசுவது, அவரது பாதத்தில் அமருவது ஆகியவை பரலோகத்தைப் பூலோகத்தில் அநுபவிக்கும் பாக்கியங்களாகும்.

ஐசுவரியம் நிறைந்த ஒரு வாலிபன் இயேசுவினிடத்தில் வந்து, "*நல்ல போதகரே*" என்று அழைத்தான் (மத்தேயு 19:16). ஆம், உலகில் வாழும் அனைவரும் நல்ல குணமுடையவர்களோடுதான் ஐக்கியங் கொள்ளவும் அவர்களது நட்பைப்பெறவும் வாஞ்சிக்கின்றனர். இதுவே மனிதரது இயல்பு. இயேசு கிறிஸ்து நல்ல போதகரானதால் அவ்வாலிபன் அவரது ஐக்கியத்தைப் பெற்று வாழ விரும்பினான்.

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் வேதபாரகன் ஒருவன் இயேசுவினிடத்தில் வந்து, "*போதகரே! நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான்*" (மத்தேயு 8:19). அவனது கூற்றில் அவனது வாஞ்சை, ஆர்வம் இவற்றைக் காண்கிறோம். ஆம், அந்த வேதபாரகனும் இயேசுவோடு ஐக்கியங்கொண்டு வாழ்வதைத் தான் சிறந்த பாக்கியம் என்றெண்ணினான்.

அன்பானவர்களே! **இப்புத்தாண்டில் இயேசுவோடு ஐக்கியங்கொண்டு வாழ்ந்து, இன்பம் பெறுங்கள்.** அவர் எங்குப்போகச் சொன்னாலும், என்ன செய்யச் சொன்னாலும் "ஆயத்தம்" என்று மறுமொழி கூறுங்கள். "இது கடினமான உபதேசம், யார் இதைப் பின்பற்றுவார்?" என்று கூறின சில சீஷர்களைப் போன்று அவரைவிட்டுப் பிரிந்துசெல்ல முற்படாதிருங்கள். **போதகரின் நெருக்கமான ஐக்கியம் உங்களுக்குள் பேராசீர்வாதங்களைக் கொண்டுவரும். உங்களுக்குள் மகிழ்ச்சியைப் பெருகப்பண்ணும்.**

இப்புத்தாண்டில் போதகராய் விளங்கும் இயேசு கிறிஸ்து, நம்மீது அன்பும் பரிவும் காட்டுவார்; நமது கடினமான சூழ்நிலைகளை அமைதிப்படுத்துவார்; அற்புதங்கள் பல நம் வாழ்வில் நிகழ்த்துவார்; நம்மை ஆற்றித் தேற்றி ஆறுதல்படுத்துவார்; நம்மை மறுரூபப் படுத்துவார்; நம்மோடு நெருங்கி ஐக்கியங் கொண்டு நம்மை மகிழச்செய்வார். அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக.

The government shall be upon His shoulder

Pastor M.K. Sam Sundaram

As I was waiting on the LORD for a message of promise to be given on this New Year's Day, I was thrilled when I received a verse from Him. But soon I realized that it was not a message suitable for the new year, and therefore I said to the Lord, "Lord, isn't this verse more appropriate for Christmas than the new year?" The Lord told me to give a message based on a part of the verse in Isaiah 9:6. Hence, being led by the Holy Spirit, I have chosen the part of the verse, *"The government shall be upon His shoulders:"*

When we speak of the government of a state or a nation, it is literally the ruling authority that we have in mind. It is expected to maintain law and order in the state or the nation. It should provide its people with the necessaries of life such as water, food, clothing, shelter etc.

Just as a worldly government meets the needs of its people and helps them live in comfort, in the same way the Lord on whose shoulder rests the responsibility of governing His people, gives them joy, peace and other heavenly blessings.

The Lord desires that His people should look to His shoulder for His blessings this year.Although you may know the various facets of Jesus' personality, this new year I want you to open your spiritual eyes and see the shoulder of Jesus so that you could lean on it all through the year and be blessed.

The Bible contains the names of those whose shoulders God used for blessing His people. As I meditated on those incidents, I began to wonder at the many things the shoulder of Jesus could do for you. If the shoulder of a human being could be great, mighty and helpful, how much greater, mightier and more helpful would the shoulder of Jesus be! May the Lord help you to lean on His shoulder and receive the blessings He offers you in the new year.

In my message today, I wish to point out a few things which Jesus, with His strong and powerful shoulder, does for you.

HE PROVIDES FOR YOU PLENTIFULLY

"And Abraham rose up early in the morning, and took bread, and a bottle of water, and gave it unto Hagar, putting it on her shoulder, and the child, and sent her away: and she departed, and wandered in the wilderness of Beersheba" (Genesis 21:14).

Abraham had to send his wife Hagar away since Sarah wanted her to be sent out of home. When Abraham sent Hagar away, he placed bread and water on her shoulder, and she left Abraham's home with her son Ishmael.

Here we find that Abraham was careful and considerate enough to provide Hagar with food and water. He was aware of the

needs of Hagar as she journeyed far away from home, and therefore he put on her shoulders food and water, the two essentials for survival.

It is the duty of the government of any nation to provide food and water to its people even during the time of famine and drought. Our spiritual government is on the shoulder of our Lord Jesus Christ and not in the hands of the governing board of an organization. If you lean on the shoulder of Jesus, it will be His responsibility to provide you with food, water and other vital necessaries of life.

In Isaiah 33:16 we read, "... *his... bread shall be given him; his water shall be sure.*" This verse gives you the assurance that you will certainly be provided for. But, since God's blessings are conditional, there is a condition laid down for the fulfilment of the promise. In v.15 we read, *"He who walks righteously and speaks uprightly, he who despises the gain of oppressions, who gestures with his hands refusing bribes, who stops his ears from hearing of bloodshed, and shuts his eyes from seeing evil;"* Only when you fulfil the condition that God has laid down in this verse, will you be given food and water. If your needs are not met, if you do not have enough food to eat, and if you experience scarcity in your life, it is because you do not fulfil the condition God gives you in this verse. When you live a life which pleases Him, He will in turn please you and will provide you with bread and water.

In Exodus 23:25 we read, *"So you shall serve the Lord your God, and He will bless your bread and your water. And I will take sickness away from the midst of you"* (NKJV).

From this verse we understand that it is not the nutritious food we eat that keeps us healthy, but it is because the Lord blesses our bread and water that we are free from sickness.

The Lord fed Elijah marvellously during the time of famine. He made the ravens bring him bread and meat, and gave him the water of the brook Cherith. The next time He appointed a poor widow to feed him. The third time it was the angel of the Lord who fed him, not once but twice. The God of Elijah is also our God. If He could provide for Him in such miraculous ways, He can also provide for you in ways He chooses. Look only to His shoulder which will provide you with all you need so that you lack nothing in your life.

HE CARRIES YOUR BURDEN COMPASSIONATELY

"And it came to pass, before he had done speaking, that, behold, Rebekah came out, who was born to Bethuel, son of Milcah, the wife of Nahor, Abraham's brother, with her pitcher upon her shoulder" (Genesis 24:15).

Here we have a picture of Rebekah carrying a pitcher on her shoulder. She offered water not only to the servant of Abraham who asked her for it, but she was also prepared to give water to his camels. This speaks of her willingness to do hard

work to help others. As a human being and a young woman Rebekah could carry only as much water as her pitcher would hold, but our Lord can carry all your burden with great compassion.

Since Jesus is willing to carry all your burden on His shoulder with compassion, He says, *"Come unto me all ye that labour and are heavy laden and I will give you rest"* (Matthew 11:28). You who are weighed down by worries and anxieties about your family or your future or your finances are advised to cast all your burden upon the Lord, for He will bear all of it on His shoulder with empathy and love, and give you rest in your soul.

There was a man of God who worked in an office where he had to work long hours, with the result, he was too tired even to have his dinner. His salary was not commensurate with the work he did. One day, as he was in prayer with a heavy heart, the Lord showed him in a vision His shoulder and said, "Look at My shoulder. Pass on your burden to Me. I shall bear it on My shoulder." Since then the man of God had been free from anxieties and worries. This is a real incident. And those of you who are bearing a heavy burden may learn a good lesson from this and lean on the shoulder of the compassionate Lord.

In another incident, a servant of God who was walking on a street in Edinburgh, Scotland, saw many school children coming in the opposite direction. He found one of them, a senior boy, carrying a smaller one on his shoulders. When asked why, he said that the boy, his friend whom he loved very much, had burned his foot in an accident and hence he was unable to walk. This opened the eyes of the servant of God, and mentally he drew an analogy between the senior boy and Jesus Christ. He heard Jesus say, "My son, I am really carrying you on My shoulder all through." Our LORD is so compassionate that He will carry you on His shoulder all your life whereas a loving friend in the world can carry you only for a brief period.

HE INTERCEDES FOR YOU INCESSANTLY

"And thou shalt put the two stones upon the shoulders of the ephod for stones of memorial unto the children of Israel: and Aaron shall bear their names before the LORD upon his two shoulders for a memorial" (Exodus 28:12).

This verse tells us that Aaron and his two sons were directed by God to wear a holy garment, breast plates, ephod and other accessories. God told Moses to take two onyx stones and engrave on them the names of the twelve tribes of Israel, six on each of them to be mounted in gold settings and fastened to the shoulder pieces of the ephod as memorial stones for Israel, and Aaron was to bear them on his two shoulders as a memorial before the LORD.

From the instructions God gave to Moses we understand that the high priest had to bear the names of the people on his shoulders and intercede for them before God. Here the shoulder stands for Jesus the High Priest and the Incomparable Intercessor, who remembers every one of our names as we are His and He has called us by our names.

In John 10:14 Jesus says we are His sheep. Since He is our Good Shepherd, He owns us, and cares for us. In this context a scene which I happened to witness comess to my mind. I was passing through the streets of Kodambakkam, and I saw a shepherd standing on the road with a rod in his hand. Suddenly he made a noise like the bleating of a sheep, and at once a flock of many sheep came to his side. The sheep had gone to graze in some grassland off the road, and when the shepherd called them, they joined together and formed a big line. This shepherd knew each one of his sheep and he would certainly have identified the missing one. Such was the closeness between the shepherd and the sheep.

Similarly, our Shepherd knows us individually and intimately. Therefore, He never forgets our names. Our own close relatives may forget our names, but Jesus never forgets us.

Long ago I went to Bombay to give God's message at a special meeting. The pastor who had arranged the meeting announced that there would be a special number, but did not mention the name of the singer. A young girl came up and sang a song. The meeting ended, and when we were at dinner, the pastor's wife asked her husband how he could forget the name of his own sister-in-law (who sang the song), especially when she was living with them in their home. All I want to say is that we human beings tend to forget the names of even relatives and friends. But, Jesus never forgets our names as He intercedes for each one of us incessantly.

HE CARES FOR YOUR GOOD REPUTATION

"And Shem and Japheth took a garment, and laid it upon both their shoulders, and went backward, and covered the nakedness of their father; and their faces were backward, and they saw not their father's nakedness" (Genesis 9:23).

In Genesis 9:20-22 we read how Noah was drunk and therefore did not realize he was naked. His son Ham saw his father's nakedness and informed his brothers about it. In v.23 it is said that Shem and Japeth took a garment, and placing it across their shoulders, walked backwards and covered their father's nakedness.

This indeed is a commendable act and it speaks of the nature of our Lord Jesus Christ, whose shoulder covers your ignominy. Jesus never exposes your dishonourable and disgraceful deeds which bring discredit to your reputation. He cares so much for your good reputation that He shields it from the shame caused by scandal.

In the New Testament we read about Joseph who was planning to cast Mary aside secretly when he knew that she, his betrothed, had become pregnant with a child. This he wanted to do because he was a righteous man and did not want to expose her to public disgrace.

Mary was not unfaithful to Joseph because she had conceived by the Holy Spirit. Joseph did not know the truth until he was told by the angel about it. Yet, he was so virtuous and moral that he did not want to expose what he thought was a sin in her.

Our Lord Jesus is so merciful that He will protect you from humiliation by forgiving your sin. He wants you to live with a good reputation. All you need to do is, humble yourself and confess your sins to Him. Manasseh, one of the kings of Judah sinned against God, but when he humbled himself, God graciously forgave him. Dear child of God, humble yourself and receive the mercy of God.

HE SANCTIFIES YOU FOR HIS SERVICE

"But unto the sons of Kohath he gave none: because the service of the sanctuary belonging unto them was that they should bear upon their shoulders" (Numbers 7:9).

Kohath a Levite and his sons were given the responsibility of carrying the holy things on their shoulders. All the Levites except the Kohathites were given wagons and oxen to carry the offering made by the leaders of the tribes for the dedication of the altar. But the Kohathites were to walk, carrying on their shoulders the holy things with great veneration.

The government is on the shoulder of Jesus, who is constantly engaged in holy work. He sanctifies His children so that they can dedicate themselves to do holy work. He says, *"I am the Lord that doth sanctify you"* (Exodus 31:13).

If you wish to grow in holiness, you should see to it that there are no hidden sins in your life. It was because of the secret sin in Achan that Joshua could not be victorious over Ai. But when Achan confessed his sin, he, his family, his cattle and other animals were stoned to death and burned. Only then could the children of Israel be successful in the battle against Ai.

This year the Lord wants to sanctify you. Confess your sins without hiding any. Then the Holy Spirit will burn all of them and consecrate you for His holy service.

HE DELIVERS YOU FROM DANGERS

"And Samson lay till midnight, and arose at midnight, and took the doors of the gate of the city, and the two posts, and went away with them, bar and all, and put them upon his shoulders, and carried them up to the top of an hill that is before Hebron" (Judges 16:3).

Samson was one of the judges of Israel. He was chosen to be a Nazarite of God from birth until his death. One day, he went to a prostitute in Gaza. The Philistines (Israel's enemies) surrounded the house where he was, and waited all night for him at the gates of the city so that they could kill him when he came out. But, at midnight, Samson got up, took hold of the city's gate and the two posts, and pulling them up bar and all, he put them on his shoulders and carried them to the top of the hill facing Hebron.

The Lord, on whose shoulder rests the government, strengthened Samson so that he was able to pull the city gates apart, carry them on his shoulders and escape from the danger of being killed by his enemies.

Our Lord is by far greater and stronger than Samson because it was He who gave

him the strength which baffled his enemies. You may be in a dangerous situation right now. Call upon the name of Jesus. He will deliver you and set you free as He miraculously delivered Peter who was put in prison by King Herod only to be killed the next day (Acts 12:3-11).

HE SEEKS AND SAVES THE SOULS THAT HAVE STRAYED

"And when he hath found it, he layeth it on his shoulders, rejoicing" (Luke 15:5).

In a parable Jesus told the Pharisees and the scribes, He spoke indirectly of His own shoulders. He said that a man had a hundred sheep, and one of them got lost. He left the rest of the ninety nine sheep and went in search of the lost one. When he found it, he joyfully put it on his shoulders and returned home.

விடுதலைத்தூதன் இதழின் ஆண்டுச் சந்தா ரூ.100/- ஐச் செலுத்தி, உறுப்பினராகப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் 2010 ஆம் ஆண்டுக்கான வாக்குத்தத்த வசன காலண்டர்கள், பாக்கெட் காலண்டர்கள் புத்தகசாலையில் விற்பனைக்கு உள்ளன.

This parable speaks of Jesus going in search of sinners (the lost) to redeem them. The shepherd carrying on his shoulders the lost sheep he has found speaks of the love of Jesus our Good Shepherd for the lost souls.

Dear child of God, you may be the only one in your family who is saved. Jesus is very concerned about the rest, and He will certainly save them, for He said, *"The Son of man is come to seek and to save that which was lost"* (Luke 19:10).

The LORD told me very clearly that He would save the members of your family who were still not saved. When He saves them, He will carry them on His shoulders. What a privilege for the lost and redeemed!

I have given you from Scripture the incidents in which human shoulders played a vital role. Now, ponder over the shoulder of Jesus and you will realize how much more His shoulders will do for you.

இந்த விடுதலைத்தூதன் இதழின்மூலமாக நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களது சாட்சிகளை, முகவரியுடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

ஊழியர் பகுதி

சாது சுந்தர் சிங்கின் ஊழியங்கள்

சாது சுந்தர்சிங்

தொடர்ச்சி

வயலோர ஊழியம்

ஒரு நாள் சுந்தர் சிங் நார்கண்டா என்ற கிராமத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்தார். அக்கிராமத்து மக்கள் அனைவருமே விவசாயிகள். சுந்தர் வயல் வெளியில் வேலை செய்துகொண்டிருந்தவர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்துவைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். இவர் ஆண்டவரை உயர்த்தியே பேசிக் கொண்டிருந்தார். கிறிஸ்துவே உண்மையான தெய்வம் என்று விளக்கிக்கொண்டிருந்தார். இதைக் கேட்ட அம்மக்கள் மிகவும் கோப மடைந்தனர்.

திடீரென்று, அக்கூட்டத்து மக்களில் ஒருவன் ஒரு கல்லை எடுத்து சாதுவின்மீது எறிந்தான். அக்கல் அவருடைய தலையைத் தாக்கி, காயப்படுத்தியது. ஆனாலும், சுந்தர் கோபமடையாமலும் தன் பிரசங்கத்தை நிறுத்தாமலும் இருந்தார். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு கல்லை எறிந்தவனுக்குக் கடும் தலை வலி ஏற்பட்டது. வேலை செய்ய முடியாமல் அரிவாளைக் கீழே போட்டுவிட்டு, உட்கார்ந்து கொண்டான். சாதுவோ அவனுடைய அரிவாளை எடுத்துக்கொண்டு அவனுக்குப் பதில் அறுவடை செய்ய வயலில் இறங்கினார்.

இதைக் கண்ட மற்ற விவசாயிகளுக்கு ஒரே ஆச்சரியம்! மனம் உருகிப்போனார்கள். உடனே கல்லெறிந்தவன், தன் தவறை உணர்ந்து சாதுவிடம் மன்னிப்புக் கேட்டான். வேலை முடிந்ததும் இவரைத் தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச் சென்று அன்போடு உபசரித்தார்கள். இதுதான் நல்ல சமயம் என்று சுந்தர் ஆண்டவரைப் பற்றி மறுபடியும் அதிகமாய்க் கூற ஆரம்பித்தார்.

சபைப் பிரிவினைவாதம்

அந்நாட்களில் சாதுவின் ஊழியத்தைக் குறித்துச் சபை மக்களுக்குள் பூசல் ஏற்பட்டது. உலகப் பிரசங்கியான ஜான்வெஸ்லியைப் போல, சுந்தரும் சபைப் பிரிவினை விவாதங்களைச் சற்றும் கண்டுகொள்ளாது ஊழியம் செய்துவந்தார். எல்லாச் சபையாரையும் ஒரே சீராய்க் கண்ணுற்று எப்பாகுபாடுமின்றி வசனத்தைச் சொல்லிவிடுவதே சுந்தரின் விருப்பமுங்கூட.

சபை கொள்கைகள் என்பது மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்துவை நேசிப்போருக்குச் சட்டதிட்டங்கள் அவசியமே தவிர, சபைப் பாகுபாடுகள் தவறானது என்று சுந்தர் கூறியதை, அன்றைய ஆங்கிலிக்கன் சபையின் போதகர்களாலும், மூப்பராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரே மந்தையின் மக்களாக எல்லாரையும் பார்க்க முடியாது என்று, தங்கள் வாதங்களைச் சபையின் பெரும் புள்ளிகள் சுந்தரிடம் கூறினார்கள். சுந்தர், பரதேசியாய்த் திரியும் மேய்ப்பனில்லா ஆடுகளை நாம் கவனித்து, மந்தைக்குள் கொண்டுவந்து சேர்த்து, எல்லாரையும் ஒரே பார்வையில் நடத்தவேண்டுமென்று வாதாடினார். ஆனால், சபையைக் குறித்த வைராக்கியமுள்ள சில கொள்கை கிறிஸ்தவர்கள், இவரின் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

இறுதியாக இதைக்குறித்து ஜெபித்து, தன் சபையின் உரிமைச் சீட்டுப்பத்திரத்தைப் போதகரிடம் திருப்பிக்கொடுத்தார். சுந்தர், சகல மக்களும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டியே ஓர் ஊழியம் செய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்டார். போதகரோ, சபைக்குள்ளேயே ஊழியஞ்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இருவரின்

விருப்பங்களும் ஒத்துப்போகாததால், சுந்தர் சிங் சபை உறுப்பினர் சீட்டைக் கொடுத்து விட்டார்.

பாதையில் நேர்ந்த பாதகங்கள்

1911 ஆம், 1912 ஆம் ஆண்டுகளில் கார்வால், நேபாளம், குலு, பஞ்சாப் போன்ற சில பகுதிகளில் பிரசங்க ஊழியத்தில் நாட்களைச் செலவிட்டார் சுந்தர். அவ்வாண்டுகளில் ஆறு மாதங்களைத் திபெத்தில் செலவிட்டார். சாது சுந்தர் சிங் ஊழியத்தின் மூலமாக அந்நிய தேசமெல்லாம் கிறிஸ்துவை அறியத்துவங்கின. ஆத்துமாக்களின் அறுவடையும் கிடைத்தது.

ஒரு நாள் சுந்தர் சிங் ஒரு கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அந்தக் கிராமத்தில் சாலையின் இரு மருங்கிலும் மரங்களும் புதர்களும் அடர்ந்திருக்கும். தனியாகச் செல்வதற்குச் சற்று அச்சம் தரும் பாதையே. வழிப்பறிக் கொள்ளைகள்கூட நடக்கும். அந்தப்பாதையில் இவர் நடந்து கொண்டிருக்கும் போது, ஒரு மனித உருவம் கண்ணில் தெரிந்து உடனே மறைந்துபோனது.

சிறிது தூரம் சென்றதும் சாலையின் குறுக்கே ஒரு மனிதன் இறந்து, போர்வையால் மூடப்பட்டு, படுக்கவைக்கப்பட்டிருந்தான். அருகே இன்னொருவன் நின்று அழுது கொண்டிருந்தான்.

சுந்தர் அவனைக் கண்டதும் பரிதாபப் பட்டார். உடனே நின்றுகொண்டிருந்த மனிதன், சுந்தரைப் பார்த்து, "ஐயா, என் நண்பன் கீழே விழுந்து மரித்துப் போனான். இவனைப் புதைப்பதற்கு என்னிடம் பணமொன்றும் இல்லை" என்று கெஞ்சினான்.

சுந்தர் தன்னிடமிருந்த கம்பளியையும் பயணத்திற்காக வைத்திருந்த காசையும் அவனுக்குக் கொடுத்துவிட்டார். அவன்மேல் இவருக்கு இரக்கம் அதிகமானது. வேறு ஏதாகிலும் இருந்திருந்தாலும் அதையும் கொடுத்துவிட்டிருப்பார்.

சிறிது தூரம் சென்றிருப்பார் சாது. பின்னாலிருந்து காசு வாங்கின அந்த மனிதன் ஓவென்று கதறிக் கொண்டு வந்தான்.

திரும்பிப் பார்த்தார் சாது. இவருக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன நடந்திருக்கும், ஏன் இப்படி அலறியடித்துக்கொண்டு வருகிறான் என்று சந்தேகப்பட்டார்.

அவன் கிட்டே வந்து, "ஐயா! என்னை மன்னித்துவிடுங்கள். நாங்கள் செய்தது எத்தனைப் பெருந்தவறு, என்னை மன்னித்து விடுங்கள்" என்றான். சுந்தருக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னப்பா நடந்தது? விளக்கமாகச் சொல்" என்றார்.

அவனோ, "நானும் என் நண்பனும் ஒருவன் மாற்றி ஒருவன், நடு சாலையில் பிணம்போல் போர்த்திப்படுத்துக்கொள்வோம். வழியில் வருவோர் போவோரிடமும் நண்பன் இறந்துவிட்டான் என்று கூறி, பணம் கேட்போம். ஆட்கள் போய்விட்டதும் எழுந்து ஓடிவிடுவோம். இப்படித்தான் உங்களிடமும் காசு வாங்கினோம். நீங்கள் கொஞ்ச தூரம் போய்விட்ட பின்பு, நான் என் நண்பனை எழுப்பினேன். ஆனால், அவனோ உண்மையாகவே செத்துக் கிடக்கிறான். நீங்கள் ஒரு தெய்வ மகன்போல் இருக்கிறீர்கள். உங்களை நாங்கள் வஞ்சித்தபடியால்தான் இந்த பெரும் தண்டனை. ஆகவே என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறி அழுதான்.

சாது சுந்தர் சிங் சாந்தத்தோடு இயேசு இரட்சகரை அந்த மனிதனுக்கு அறிமுகப் படுத்தினார். அந்த மனிதன் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானமும் பெற்றுக் கொண்டான்.

(தொடரும்)

உன்னதப்பாட்டு

தொடர்ச்சி - பாடம் 18

(உன்னதப்பாட்டு 5:8)

8 ஆம் வசனம்

"எருசலேமின் குமாரத்திகளே! என் நேசரைக் கண்டீர்களானால், நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன் என்று அவர்களுக்குச் சொல்லும்படி உங்களை ஆணையிடுகிறேன்" (உன்.5:8).

முதிர்ந்த ஆவிக்குரிய மேய்ப்பர்களால்—தலைவர்களால்—எவ்வித நன்மையையும் பெறமுடியாத மணவாட்டி, இப்போது ஆவிக்குரிய வாழ்வில் குறைந்த அனுபவமுள்ளவர்களிடத்தில்—எருசலேம் குமாரத்திகளிடத்தில்—திரும்பினாள். அவர்களில் எவரேனும் தனக்கு உதவிசெய்வர் என்றெண்ணி, அவர்களது இரக்கத்தை நாடினாள். தனக்குப் பரிதாபங்காட்டுவார்களா, என்றெண்ணினாள் அவள்.

கிறிஸ்தவ வாழ்வில் முதிர்ச்சி பெறாதவர்களிடத்தில், "நான் தோல்விகளைச் சந்தித்திருக்கிறேன்; எனக்காக ஜெபியுங்கள்" என்று உதவி நாடும் விசுவாசிகளுக்கு இவர்கள் ஒப்பாவர்.

"என் நேசரைக் கண்டீர்களேயானால்" என்ற சந்தேகத் தொனியோடு எருசலேம் குமாரத்திகளிடம் வினவினாள் அவள். ஆவிக்குரிய வாழ்வில் தரம் குறைந்த அவர்கள் தன் நேசரைக் கண்டிருக்கமுடியாது என்பதை அவள் நன்கு அறிந்தும், *"நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்"* என்றுள்ள தனது நிலையைக் கூறி, அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தினாள்.

'நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்' என்றுள்ள சொற்றொடர் உன்னதப்பாட்டு 2:5 இலும், 5:8 இலும் காணப்படுகின்றது. இவை ஒரே பொருள் கொண்டவையல்ல.

முன்பு, அவள் நேசரின் அன்பில் மூழ்கித் திருப்தியடைந்தவளாய் அவருடைய நேசத்தால் சோகமடைந்திருந்தாள். இச்சமயம், அவள் சற்று இருண்டு, வறண்ட அனுபவத்திலும், தனது ஜெபங்களுக்குப் பதில் கிடையாத நிலையிலும், அசதியோடு ஜீவித்துக் கொண்டிருந்தாள். எவ்விதமாகிலும் தன் நேசரைப் பார்க்கவேண்டும் என்ற வாஞ்சையினால், அவரது அன்பிற்காக அவள் ஏங்கினாள். இது, முன்பு அவள் பெற்றிருந்த சோகமல்ல; இழந்துபோன அவரது அன்புக்காக ஏங்கித் தவிக்கும் சோகமிது.

அன்பான விசுவாசிகளே! இன்று நீங்கள் எந்த நிலையில் காணப்படுகிறீர்கள்? நேச இயேசுவின் அன்பில் மூழ்கி, அவரது அன்பினால் சோகமடைந்திருக்கிறீர்களா? அன்றி, உங்களது ஜெபங்களுக்குப் பதிலின்றி, உங்களது தரிசனத்தையும் இழந்து தவிக்கிறீர்களா? உங்களது பிழைகளை உணர்ந்துகொள்ளுங்கள். தேவன் உங்களைவிட்டுச் சென்றுவிட்டார் என்பதை அறியுங்கள். மறுபடியும் அவரது உயிர்ப்பிக்கும் அன்புக்காக ஏங்குங்கள். அவரது அன்பில் மூழ்கி, சோகமடையுங்கள். கர்த்தர் தாமே உங்களுக்குத் தமது கிருபைகளைத் தந்தருளுவாராக.

உன்னதப்பாட்டு 5 ஆம் அதிகாரம் 2 ஆம் வசனத்திலிருந்து 7 ஆம் அதிகாரம் 13 ஆம் வசனங்கள்வரை மணவாட்டியின் மறுரூபப்படுத்துகின்ற அன்பைக்குறித்துக் காண்கிறோம்.

பாடம் 19

9 ஆம் வசனம்

"ஸ்திரீகளுக்குள் ரூபவதியே! மற்ற நேசரைப்பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்? நீ இப்படி எங்களை ஆணையிட, மற்ற நேசரைப்பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்?" (உன்.5:9).

இங்கு, எருசலேம் குமாரத்திகள் மணவாட்டியிடம் கேட்கும் கேள்வியைக் காண்கிறோம். எருசலேம் குமாரத்திகள் ஆவிக்குரிய வளர்ச்சியிலே குறைவுள்ளவர்கள். இவர்கள் சபையிலே காணும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு ஒப்பானவர். எனினும், மத்திய ஆகாயத்திலே இயேசு கிறிஸ்து வரும்போது, அவரைச் சந்திக்க ஆயத்த மில்லாதவர்கள். ஆவிக்குரிய வளர்ச்சியிலே குன்றிய இவர்கள், மணவாட்டியாகிய கன்னிகையின் உயரிய பண்பை அறிந்ததினால் *"ஸ்திரீகளுக்குள் ரூபவதி"* என்று அழைத்து, அவளை மெச்சிப்பேசினர்.

ஆம், அவளது ஆவிக்குரிய அழகான தாழ்மையிலும், பரிசுத்தத்திலும், மகிமையிலும் சிறந்து, ஸ்திரீகளுக்குள்ளே அவள் ரூபவதி யாகக் காணப்பட்டாள். ஆகவே, எருசலேம் குமாரத்திகளால் அவள் பாராட்டப்பட்டாள்.

உன்னதப்பாட்டு 5:8 இன்படி, அவள் தன் நேசரை இழந்து தவித்தாள். எனினும், அவளது முகத்தில் நேசரது முகப்பிரசன்னம் பிரதிபலித்துக் காணப்பட்டது. ஆகவே, எருசலேம் குமாரத்திகளின் கண்களுக்கு அவள் வேறுபட்டவளாகக் காணப்பட்டாள்.

"உன் நேசர் எதினால் விசேஷித்தவர்?" என்றுள்ள கேள்வியின் உள்ளான பொருளை நோக்கின், வேறு பல நேசர்களும் எருசலேம் குமாரத்திகளின் உள்ளத்தில் இருந்தனர் போன்று தோன்றுகிறது அல்லவா? அதனால் தான் அவர்களது கண்களுக்கு சூலமித்தி, ஸ்திரீகளுக்குள்ளே மேம்பட்டவளாகக் காணப் பட்டாள்.

அன்பானவர்களே! தேவ சபையா ருடைய அன்பு—நேசம்—கற்புள்ளது என்பதை இதனால் அறிகிறோம். சபைக்கு மற்றொரு நேசர் இருக்கமுடியாது; இருக்கவுங்கூடாது. ஆம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் நாம் கொண்டிருக்கும் அன்பு கற்புள்ளதா யிருக்கட்டும்.

"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்த படியால்" (2 கொரி.11:2), என்றுள்ள சொற்றொடரை இங்குக் காண்க.

கொரிந்து சபைக்கு அப்போஸ் தலனாகிய பவுல் எழுதுகையில், *"கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு"* கற்புள்ள கன்னிகையாய் உங்களை நியமித்திருக்கிறேன் என்கிறார். ஆம், சபைக்கு ஒரே புருஷன்தான்—ஒரே நேசர் தான்—உண்டு.

நம்முடைய நேசர் மற்றவர்களோடு ஒப்பிடப்படமுடியாதவர். அவருடைய பண்பில் பூரணர். உலகில் அவதரித்த அவதாரங்க ளோடும், எந்த மனிதரோடும் ஒப்பிடக்கூடாத உயர்ந்தவர். உலகோர் மற்ற மனிதரோடு இயேசுவை ஒப்பிட்டுப் பேசுவது அவர்களது மதியீனமே. **உலகோர் நம்மைக் காணும் போது இயேசுவின் குணாதிசயங்கள் நம்மில் பிரதிபலிக்கட்டும். "உன் நேசர் யார்?" என்றுள்ள கேள்வியை நம்மிடம் கேட்கட்டும்.**

10 ஆம் வசனம்

"என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்; பதினாயிரம்பேர்களில் சிறந்தவர்" (உன்.5:10).

இங்குக் கூறப்பட்டுள்ள, 'வெண்மை' என்ற சொல் இரத்தச் சோகையினால் வெளிறிக் காணப்படுபவர்களுடைய வெண்மை அல்ல; அன்றி, மரித்த சரீரத்தில் காணப்படும் வெண்மையுமல்ல. பாவத்திற்கும், பாவி களுக்கும் விலகி வாழ்ந்த ஒப்பற்ற பரிசுத்தரின்

வெண்மையைக்குறித்துத்தான் புகழ்ந்தாள் மணவாட்டி.

அவரது தோற்றம் வெண்மையும் சிவப்பும் இணைந்தொரு தோற்றமாகும். இது திட ஆரோக்கியத்தின் — பூரண ஆரோக்கியத்தின் — அறிகுறியாகும். வல்லமையும் துடிப்பும், பிரகாசமும் நிறைந்த புத்துணர்ச்சியின் ஜீவன் அவரிலே காணப்பட்டது. தாவீதும் இவ்வித நல்ல ஆரோக்கியத்தைப் பெற்றிருந்தான் என்று வேதத்தில் காண்கிறோம்.

"அவன் சிவந்தமேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமுமுள்ளவனா யிருந்தான்" (1 சாமு.16:12); சிவந்த மேனியுடன்கூடிய நல்ஆரோக்கியத்தைத் தாவீது பெற்றிருந்தது. அவனது ஜீவனின் துடிதுடிப்பைப் பிரதிபலித்துக்காட்டுகின்றது.

தேவாலயத்தில் தமது பன்னிரண்டாம் வயதிலே காணப்பட்ட இயேசு கிறிஸ்து, சிலுவையிலே தாம் மரிக்கும்வரை நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்தார். அவர் யாதொரு வியாதியிலும் இருந்ததாக நாம் வேதத்தில் காணமுடியாது.

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் மனிதனாய் அவதரித்தபடியால், அவர் களைப்புற்றுக் காணப்பட்டார் என்றும், தாகமடைந்தார் என்றும், இளைப்பாறுதலை விரும்பினார் என்றும் காண்கிறோம். அவர் வாழ்ந்த நாட்கள் முழுவதும் வெண்மையும் சிவப்புமானவராய், நல்ல ஆரோக்கிய முடையவராய் வாழ்ந்தார். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் நாமும் மிகுந்த குதூகலத்துடனும் நல்ல ஆரோக்கியத் துடனும் வாழமுடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுரூபமலைக்குச் சென்று ஜெபித்தபோது, அவருடைய முகரூபம் மாறிற்று; அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது (லூக்கா 9:29). இது, 'அவர் வெண்மை யானவர்' என்பதை நிரூபிக்கிறது.

ஆனால் ஏசாயா 53:2 இல், *"நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது"* என்று வாசிக்கிறோம். இது அவரது பாடுகளையும் மரணத்தையும் விளக்குகின்றது. *"குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே"* என்று, 1 பேதுரு 1:19 இல் காண்கிறோம். இயேசு கிறிஸ்து தம்மைக் குற்ற நிவாரணபலியாகச் சிலுவையிலே ஒப்புக்கொடுத்ததைச் சுட்டிக் காட்டவே, *'சிவப்புமானவர்'* என்றுள்ள சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆம், அவரது சிவப்பு நிறம் நம்மை மீட்பதற்காகச் சிந்திய அவரது இரத்தத்தை உருவகப்படுத்துகிறது.

"பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்" என்றாள் மணவாட்டி. இயேசு என்ற நாமத்தினால் திரள் கூட்ட மக்கள் இரட்சிக்கப் பட்டுள்ளனர்; இன்றும் இரட்சிக்கப்பட்டு வருகின்றனர். பரிசுத்தவான்களாய் மாறி யுள்ளனர்; அவரால் வல்லமையாகப் பயன் படுத்தப்பட்டும் வருகின்றனர். எனினும், இவ்வனைவரும் இயேசு கிறிஸ்துவுக்கு இணையாவாரோ? அவர் ஈடு, இணையற்ற சிறந்தவரல்லவோ?

"இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,

பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி.2:10,11).

"இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங் களையும் உண்டாக்கினார்.

இவர் அவருடைய மகிமையின்

பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.

இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்" (எபி.1:2-4).

ஆம், அவர் தேவதூதரைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவர்தான். அவரது மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமும் பதினாயிரம் பேர்களிலும் அவர் சிறந்தவர் என்பதை நிரூபிக்கின்றது.

(தொடரும்)

பெண்கள் பகுதி

கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்தர்

ஹஜ்

ஜீவன் கொடுக்கும் தண்ணீர்

யாத்திரிகர்களின் ஓய்வுப் பாசறை, ஹறம் பள்ளிவாசலிலிருந்து வெகு தூரத்திலிருந்தது. ஷேக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட வழிகாட்டியான அப்துல்லா, பாசறையின் வாயிலில் எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். தந்தையும் அப்துல்லாவும் கைகுலுக்கி, ஒருவரையொருவர் தழுவி வாழ்த்திக் கொண்டனர்.

"அல்ஹான் வா சலாம் (நல்வரவு)" என்றார் அப்துல்லா. "உமக்கும் நல்வரவு" என்று, தந்தையும் அவரை வாழ்த்தினார். ஹஜ்ஜின் அன்பின் பாணியில், பெருஞ் செல்வந்தரான என் தந்தை எளிய அராபிய அப்துல்லாவை தனது தமையனாகவும் தனக்குச் சமமானவராகவும் மிக எளிதில் ஏற்றுக் கொண்டார். "வருக, வருக அல்லாஹ்வின் பெயரால் தங்களை வருக என வரவேற்கின்றோம்'' என்றார் அப்துல்லா. "கனம் பொருந்திய ஷேக் அவர்களிடமிருந்து வந்த கடிதத்தை நான் பெற்றேன். தாங்கள் தங்குவதற்கான அறைகளை வாடகைக்கு அமர்த்தி விட்டேன்,'' என்றார் அப்துல்லா. பலிக்கான ஆட்டுக்குட்டிகளைப்பற்றி இருவரும் சிறிது பேசிக்கொண்டனர்.

எனது தாதிமார் உட்பட ஒவ்வொருவருக்கென்றும் இரண்டு ஆட்டுக்குட்டிகள் வேண்டும் என்று கணக்கிட்டு மொத்தம் எட்டு ஆட்டுக்குட்டிகளை அனுப்பும்படி தந்தை ஏற்பாடு செய்தார்.

ஒரு கணம் பரவசத்தால் என் உடம்பெல்லாம் சிலிர்த்தது! மெக்கா யாத்திரையின் உச்சகட்டம் எய்த் அல் ஆடா எனப்படும் பலியின் பண்டிகையாகும். தனது மகனாகிய ஈசாக்கைப் பலியிட ஆபிரகாம் ஆயத்தமாக இருந்ததைச் சிறப்பிக்கும் பண்டிகையாகும் அது. அநேக ஆட்டுக்குட்டிகளின் இரத்தத்தால் தன் ஜெபத்தை சக்தியுள்ளதாகச் செய்யும் பொருட்டு என் தந்தை அவ்வளவு கவனமாயிருந்தார்.

எங்கள் அறைகள் யாவும் ஒரே மட்டத்தில் வரிசையாக இருந்தன. எங்களுக்கென்று குளியலறைகள் இணைந்த இரு அறைகள் இருந்தன. அறைகள் மிக எளியவை. படுத்துத் தூங்குவதற்கான இரு கயிற்றுக் கட்டில்களைத் தவிர வேறு தட்டுமுட்டுச் சாமான்கள் அவ்வறைகளில் இல்லை. அதைப் பார்த்ததும், எங்கள் வீட்டிலுள்ள பஞ்சு மெத்தைப் படுக்கைக்காக ஏங்க ஆரம்பித்தேன். ஏனென்றால் மரத்துப்போன எனது இடப்

பக்கத்தின் வேதனை, திரும்பிப் படுக்கும்போது இக்கட்டிலில் அதிகமாகிவிடும். ஆனாலும் புண்ணிய யாத்திரையில் இதையெல்லாம் பொறுத்துத்தானே ஆகவேண்டும்! அனுதினமும் அணியணியாக இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் மெக்கா வந்து, இருக்குமிடமெல்லாவற்றையும், ஹோட்டல்களையும், விடுதிகளையும், திறந்த வெளியையும் நிரப்புகின்றனரே. ஆகவே, வசதியைக் கொஞ்சங்கூட எதிர்பார்க்க முடியாது. ஆஸ்தியுள்ளவர்கள் தங்கள் செல்வச் செருக்கை அங்குக் காண்பித்துக் கொள்ளவும் முடியாது. யாரேனும் புகார் சொன்னாலோ, அல்லது கர்வத்துடனும், பெருமையுடனும் நடந்தாலோ, அல்லது வெப்பத்தால் கோபமடைந்தாலோ அவர்கள் அதுவரை ஈட்டிய புண்ணியம் யாவற்றையும் இழந்துவிடுவர் என என் தந்தை கூறினார்.

என்ன வெப்பம்! அறையிலுள்ள மின்விசிறி சுற்றிச் சுற்றி வெப்பக் காற்றை மட்டும் வீசிற்று. சன்னல்களில் தொங்கிய பச்சைத் திரை நேராக வெயில் உட்புகாதபடி மறைத்தது.

ஹஜ்ஜுக்கு சுமார் ஒரு மாத காலம் தேவை. ஏனெனில் ஒரு யாத்திரிகர் கண்டு களிக்கவேண்டிய புண்ணிய இடங்கள் பலப்பல.

லாகூர், ராவல்பிண்டி, பெஷாவார், கராச்சி ஆகிய இடங்களிலிருந்து வந்த வியாபாரிகளான நண்பர்கள் சிலரை என் தந்தை அங்குச் சந்தித்தார். ஆயினும் பஞ்சின் விலை, கோதுமையின் விலையைப்பற்றி அவர்கள் பேசவேயில்லை. உலகக்காரியங்களுக்கு மெக்காவில் இடமில்லை. அதோடு பிறப்பு, நாடு, சாதனை, பணி, மதிப்பு நிலை இவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளுக்கும் அங்கு இடமில்லை. ஹஜ் பாசறையின் மாபெரும் விருந்துக்கூடங்களில் வேலையாட்கள் தங்கள் ஆட்சியாளர் அருகில் அமர்ந்து உணவு உண்டனர். ஹஜ் யாத்திரிகர்கள் அணிந்திருந்த ஒரேவித ஆடையான இஹ்றாம் எல்லா வேற்றுமைகளையும் மூடிற்று.

ஆண்கள் யாவரும் எளிய பருத்தி லுங்கியை இடுப்பில் கட்டி மற்றொரு ஆடையை தோளைச்சுற்றிப் போட்டு உடம்பை போர்த்துக்கொண்டிருந்தனர். பெண்கள் எளிய வெண்மையான பருத்தி ஆடைகளை உடுத்தி, வெள்ள முக்காடிட்டு, வெள்ள காலுறை அணிந்து சென்றனர். பெண்கள் தங்கள் முகங்களை அங்கு மூடுதிரையால் மூடுவதில்லை.

முகமது நபியின் கூற்றின்படி ஆண்டவனின் காட்சியில் எல்லா மக்களும் ஒரே விலைமதிப்புடையவர்கள். "இஹ்றாமை நீ உடுத்திய உடனே உன் பழைய வாழ்க்கையை நீ நீக்கிவிட்டு, புதிய வாழ்க்கைக்குள் வருகிறாய். இஹ்றாமே உன் பிண முக்காடு. இந்த ஆடையில் நீ இறந்து போனால், எந்தத் தடையுமின்றி நீ நேராக விண்ணுலகம் சென்றுவிடுவாய்," என்று மிகக் கருத்துடன் என் தந்தை பயபக்தியுடன் கூறினார்.

ஒருவர் தம் வருவாயில் ஒரு பகுதியை எளியவர்களின் வறுமையைப் போக்கும்படி ஈவது ஜகட் என்று அழைக்கப்படும். இது இஸ்லாமின் மூன்றாவது கடமையாகும்.

இஸ்லாமின் நான்காவது கடமையாவது, உண்ணா நோன்பு. முகதிய ஆண்டுக் குறிப்பேட்டின் சந்திரனின் கணக்கின்படி ஒன்பதாவது மாதமாகிய ராமாதான் மாதத்தில் விடியற்காலம் முதல் சூரியன் அடைதல்வரை முஸ்லிம்கள் உணவு அருந்துவதில்லை. இதைத் தொடர்ந்து வறியவர்க்கான வரியை (ஜகட்) செலுத்துவர்.

என் தந்தையின் பக்தியும் இதற்குக் கொஞ்சமும் குறைவானதல்ல என்றே நான் எண்ணிப் பூரித்தேன். எனது தந்தையும் ஏழைகள் துயர் நீக்கியுள்ளார். மூன்றாவது தடவையாக ஹஜ் வந்துள்ளார். அதுமட்டுமல்லாமல் எனக்கும் ஜெபங்களைக் கற்றுக் கொடுத்தவர் அவர்தானல்லவா?

அவரது நெற்றியில் தெளிவாகத் தோன்றிய மிஹ்ராப் என்னும் பள்ளமான திருவடுவை நோக்கிப் பார்த்தேன். ஒவ்வொரு பள்ளிவாசலிலும் மெக்காவைச் சுட்டிக்காட்டும் மாடத்தின் தூய வளைவைப் போன்ற பள்ளமே அது. தொழுகையின்போது நெற்றியைத் தரையில் அழுத்தித் தொடுவதால் வரும் வடுவே அது. வழிபாட்டில் சிறந்த மனிதனுக்கான அடையாளம் அந்த நெற்றி வடுவே. இஸ்லாமின் இரண்டாவது கடமை தொழுகையாகும்.

முதல் நாளில் நான் வெளியே செல்லவேயில்லை. நான் என் அறையிலேயே தங்கி தொழுகை செய்தேன். குர் ஆனைப் படித்தேன். அடுத்த நாள் கஃபாவை நோக்கிச் செல்லவிருந்த அதிகக் கஷ்டமான பயணத் திற்காக என்னை ஆயத்தம் செய்து கொண்டேன். பல்லாயிரமான மக்கள் கடும் வெப்பத்தில் நெருக்கிக்கொண்டு செல்லுவர் என்பது எனக்குத் தெரியும். சலிமாவும் சீமாவும் எனக்கு உணவு கொண்டுவந்து என்னுடனே இருந்தனர்.

சூரியன் அடையும்போது பள்ளி வாயிலின் தூபியில் மூய்சீன் நின்று தொழுகைக்காக மக்களை அழைக்கும் சத்தத்தைக் கேட்டவுடனே, மெக்காவிலுள்ள அனைவரும் தாங்கள் இருக்கும் இடங்களி லேயே, உலகின் எப்பகுதியிலும் உள்ள முஸ்லிம்களின் ஒற்றுமையின் சின்னமாகிய கஃபாவை நோக்கித் திரும்பினர். நேராக நிமிர்ந்து நின்று தங்கள் இரு கைகளையும் முகத்துக்கு இருபுறமும் உயர்த்தி, "இறைவனே எல்லாரிலும் மிகப் பெரியவன்" என்று வழிபட்டனர். அதன்பின்பு கைகளைத் தாழ்த்தினர். ஆண்கள் வலக்கையை இடது கையின் மேல் வைப்பர். பெண்கள் வலக்கையை அதனினும் சிறிது தாழ்த்தி இடுப்பில் வைத்துத் தொழுதனர்.

இன்னும் சில தொழுகைகள் முறைப்படி தொடர்ந்து நடந்தன. ஃபாத்திஹா, குர் ஆனிலிருந்து சில துஆக்கள் ஓதினர். பின்பு தங்கள் கைகளை, கால் முட்டுகளில் வைத்துக் இடுப்பு அளவுக்குக் குனிந்து, "என் மாபெரும் தேவன் எவ்வளவு மேன்மையுள்ளவர்!" என்றனர்.

அதன்பின்பு யாவரும் நிமிர்ந்து நின்று தங்கள் கைகளை நெகிழவிட்டவர்களாக, "அல்லாஹ்வைப் புகழ்ந்தோரை அவர் கேட்டார். எம் ஆண்டவனே, உமக்கே புகழ்ச்சியுண்டாவதாக," என்று மொழிந்தனர்.

பின்பு "அல்லாஹ் அக்பர்" ஐ பண்ணமையச் சொல்லிக்கொண்டே குப்புறப் படுத்து மும்முறை, "மிகவும் உயர்ந்தவராகிய என் ஆண்டவரே! சகல மேன்மையும் உமக்கே உரித்தாகுக" என்றனர். அதன்பின்பு எழுந்து, முழங்கால்படியிட்டு உட்கார்ந்து:

"ஓ அல்லாஹ்வே! என்னை மன்னியும், என் பேரில் பரிவோடிரும்" என்று சொல்லி மறுபடியும் முகங்குப்புற விழுந்து வணங்கினர். இதுவே ஒரு முழுமையான ராகாத் தொழுகையாகும்! அதைத் தொடர்ந்து மாறிமாறி தொழுகைகள் இதேபோல் நடைபெற்றன.

நோயாளியாகிய நானோ என் தாதிமாரின் உதவியுடன் உட்கார்ந்தவாறே தொழுகை செய்தேன். எனது தொழுகைப் பாயின்மேல்வளை கஃபாவை நோக்கி யிருந்தது.

எல்லாமே எனக்கு ஒரு கனவாகத் தோன்றிற்று. உலகின் மத்தியப் பகுதியில் நானும் தொழுகை செய்து கொண்டிருப்பது உண்மைதானா? இனிமேல் நடக்கவே முடியாவிட்டால் என்ன செய்வது? சரி. நடக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை. "தேவனே! நான் இங்கு இருப்பதே எனக்குப் போதும்" என்ற ஒரு துணிச்சலான எண்ணமும் எனக்குள் வந்தது.

ஆபிரகாம் கட்டின இறைவனுடைய வீட்டைக் காணும் பாக்கியம் ஒருவருக்குக்

கிட்டுமானால் அவரது வாழ்நாட்களின் ஓட்டம் மெய்யாகவே பயனுள்ளதாகும்.

எனக்குள் நான் பேசிக்கொண்டேன்: "இத்துடன் 14 ஆண்டுகள் முடமான நிலையிலேயே வாழ்ந்துவிட்டாய் என்பது மெய்யே. ஆனால் இவ்விடத்தில், கடவுளின் பெயரில் நம்பிக்கை மிக உறுதியாக உள்ளது. அநேகருடைய வழிபாட்டின் சக்தி இங்கு மையம்கொண்டுள்ளது. கடவுள் உன் குடும்பத்தாரின் தொழுகையைக் கேட்பார். நீ குணமாகும்படி முகமது உனக்காக இறைவனை வேண்டுவார்." கடவுளைப்பற்றி நான் எண்ணும்போது நித்தியவாசியாகிய அவருக்கு நான் எந்த உருவும் கொடுக்க முடியவில்லை. திருக் குர் ஆனில் இறைவன் 99 பெயர்கட்கும் அதிகமான பெயர் சூட்டி அழைக்கப் பட்டாலும், அவர் அறியப்படாதவராகவே எனக்கிருந்தார். மனிதனுக்குரிய எதனுடனும் அவர் ஒப்பிடப்பட முடியாது என்றே எனக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டது. ஆயினும் என்னை அறியாமலேயே, ஃபாத்திஹாவிலுள்ள ஒரு வழிபாட்டிலுள்ள வார்த்தைகளை என் உதடுகள் உச்சரிக்கத் தொடங்கின.

"உம்மை மட்டுமே நாங்கள் தொழுகின்றோம்,
உம்மிடமே உதவிக்காய் வேண்டுகின்றோம்,
உமது தயவைப் பெற்ற பக்தர்களின்
நேரான வழியில் எம்மை நடத்தும்."

ஒரு முகமதியனுக்கு வாழ்க்கை ஒரு பாதையாகும். தனிப்பட்ட ஒவ்வொருவனும் அப்பாதையில் பிறப்புக்கும் மரணத்துக்கும், படைப்புக்கும் இறுதித் தீர்ப்புக்கும் இடையில் எங்கோ இருக்கிறான். எனது முடிவு எப்பொழுது என்பதை நான் அறியாவிட்டாலும் நானும் என் வாழ்வின் இறுதிவரை செல்லும் புண்ணிய யாத்திரையைத் தொடங்கிவிட்டேன்.

(தொடரும்)

"And he has authority from the chief priest to bind all who call on God's name. But the Lord said to him... he is a chosen vessel of mine to bear My name before gentiles, kings and the children of Israel" (Acts 9:14,15).

God used adversity in Saul's life to cause him to pay attention to Him in a new way. While Saul was travelling to Damascus where he intended to persecute Christians in that city, his murderous intent nearly consumed him. God sent Paul crashing to the ground with a blazing light and Paul came to his senses. He repented of his misdeeds and got reconciled to the Lord. When Paul, the imperfect person committed himself to the Lord, he became a tool in God's hand and God used him mightily in His vineyard.

Through the Holy Spirit, God enables you to do everything. Do not let sin and shame discourage you. Do not let your feelings overshadow the truth. God will certainly forgive you and use you to restore others.

Let me enumerate a few prerequisites to equip you for the Master's service.

1. Conviction of inadequacy:

God cannot use you if you walk in the flesh. Active flesh hinders the spirit. Those who are carnally minded cannot please God. Those who have cravings of carnality are the enemies of God. Fleshly mindedness brings about death which is separation from God. Anointing does the remarkable work of destroying the flesh. There is perpetual war between the flesh and the spirit. Giving room for the flesh deadens the work of the spirit. Serving the Lord without the aid of the Holy Spirit is like putting the cart before the horse. Without the anointing of the Holy Spirit, you are incapable, unwilling and too weak to be the ambassadors of Christ. You need the Holy Spirit who is powerful enough to make you witnesses at home and to the whole earth.

2. Purity of life:

Psalm 73:1 says, *"Truly God is good to Israel, to such as are pure in heart."* God imparts His goodness to people whose hearts are untainted and blameless before God.

Psalm 12:6 records: *"The words of the Lord are pure words like silver tried in a furnace of earth, purified seven times."* When you meditate and internalize the Word of God, your words and thoughts and deeds become pure. God's Word serves as a cleansing agent and it does the unique work of flushing out the dross and impurities. The beatitudes bring out the truth namely, *"Blessed are the pure in heart, for they shall see God"* (Matthew 5:8). Continually and immediately confessing sin and repenting of sin cause the fruit of purity. The pure heart is the residence of the Holy Spirit. The venerable Spirit pervades and permeates the innermost recesses of the heart. As a result, the face radiates the glow and attests to the pristine purity of life.

3. Intimacy with God:

This should be our highest priority. This determines the impact of our lives. Anne Graham Lotz once told an interviewer about the fiery trials she faced over many years, including her parents' serious illnesses and her son's battle with cancer. She finally came to the desperate need of Jesus. Anne realized that if she had a personal and intimate relationship with the Saviour, she would get relief from the troubles that plagued her. This priceless fellowship with the Lord will unfold God's plans for your ministry. Bible reading, prayer and meditating God's name are the avenues of fellowship. These avenues equip you with the needed grace and courage and power to do God's work. Draw nigh to God and He will draw nigh to you. He knows your weaknesses. He will dispel all the evil forces that preclude the possibility of serving the Lord. You will be a powerful instrument in His hands and you will see the miracle of witnessing and drawing multitudes to the Lord.

4. Unconditional surrender:

There are three reasons for God seeking our surrender.

a) He loves us and desires our commitment. As long as we hold something back from God, we cannot know Him completely and experience His love fully. When we sur-

render to Him without any reservation, we receive His blessings. The disciples turned the world upside down because they surrendered everything to the Lord.

b) He wants our service for Him to be effective and fruitful. The closer we walk with God, the more useful we will be to the heathens. The more energetically we nurture our relationship with the Lord, the greater the positive mark we will leave behind.

c) He waits for the freedom to bless us. He asks us to willingly surrender so that He can bestow upon us the best blessings. He will refuse us no good thing, when we gladly submit to His will (Rom.8:32). It only makes sense to surrender because when we do, we delight God's heart. **Unrestrained surrender is the only means of fulfilling the ministry that God assigns to us.**

To God be the glory.

சிறுவர் பகுதி

உன்சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்

"உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்" (ஏசாயா 58:8).

கிறிஸ்துவுக்குள் பிரியமான என் செல்லப் பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள். கடந்த வருட முழுவதும் நம்மைக் கண்மணிபோல பாதுகாத்த தேவனுக்கு, நாம் இந்தப் புதிய ஆண்டில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒருவேளை பழைய ஆண்டின் தோல்விகளை எண்ணி, இப்புதிய ஆண்டை பயத்துடன் தொடங்கியிருப்பீர்களேயானால், பயம்வேண்டாம். கர்த்தர் உங்கள் வாழ்வை வளமாக்குவார். விசுவாசத்தோடு இந்தக் கதையை வாசியுங்கள்.

"டிங், டிங், டிங், டிங்!" என்று ஒலித்த மணி சத்தத்தைக் கேட்ட மாணவர்கள் கவலையுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இனமறியாத பயம் அவர்கள் உள்ளத்தை ஆட்கொண்டது. அவர்கள் செய்துகொண்டிருந்த வேலைகளை விட்டு விட்டு, பொதுக்கூடத்தை நோக்கி ஓடினர்.

பொதுக்கூடத்தில் விடுதிகாப்பாளர் கண்களில் அனல் பறக்க, முறைப்புடன் நிற்க, அவர் அருகே வெண்ணாடை அணிந்த ஒருவர் கையில் வேதாகமத்துடனும், புன்னகை பூத்த முகத்துடனும் நின்றிருந்தார். ஓடிவந்த மாணவர்கள் அணிவகுத்து நின்றனர்.

"டேய்! இன்று இந்த வருடத்தின் கடைசி நாள். நாளை புதுவருடம் தொடங்கப் போகிறது. நாளை காலை எட்டு மணிக்கெல்லாம் இங்குக் கூடி வரவேண்டும் தெரியுமா? இங்கே நிற்கும் இந்த அங்கிள் நாளை காலையில் உங்களுக்காக ஜெபித்து, பரிசுப் பொருட்களைக் கொடுப்பார், சரியா? என்று அதிகாரத்தொனியுடன் விடுதி காப்பாளர் கூறினார்.

தலைகளை அசைத்த மாணவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். அவர்களுள் ஒருவனான மோகன் ஏதோ ஒரு சிந்தையில் ஆழ்ந்தவனாய் மெள்ள நடந்தான். அவனுடைய கவலையெல்லாம் இன்னுமொரு வருடம் இங்குத் தங்கியிருக்கவேண்டுமே என்றுதான். அவன் சிந்தனையைக் கலைப்பதுபோல விடுதிகாப்பாளரின் கர்ஜிக்கும் குரல் கரகரக்க, வேகமாக ஓடினான் மோகன்.

இது ஒரு சாதாரணப் பள்ளியின் விடுதி அல்ல. இது ஒரு சீர்திருத்தப்பள்ளி. மோகன் பத்து வயது சிறுவன். அவனுடைய பெற்றோர் யார் என்று ஒருவருக்கும் தெரியாது. அவன் மேல் பரிதாபப்பட்ட ஒரு தம்பதியர் அவனைச் சிறுவயதிலிருந்து தம் வீட்டில் வளர்த்து வந்தனர். அவனோ மற்ற பிள்ளைகளைப்போல வசதியாக வாழவேண்டுமென்று விரும்பியதால், அதிகப்பணம் சம்பாதிக்கும் குறுக்கு வழிகளை ஆராயத்தொடங்கினான்.

அப்பொழுது அவனுக்குக் கிடைத்த ஒரு சில கெட்ட நண்பர்கள் அவனை, பிக்பாக்கெட் தொழிலுக்கு அறிமுகப்படுத்தினர். ஆகவே, அவன் வீட்டைவிட்டு வெளியேறினான். சிறுவனானபடியால் துணிந்து அநேக காரியங்களைச் செய்து, தன் நண்பர்களின் மதிப்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரனானான்.

"பலநாள் திருடன் ஒரு நாள் பிடிபடுவான்" என்னும் பழமொழிக்கேற்ப, மோகனும் ஒருநாள் போலிசாரிடம் பிடிபட்டான். இரண்டுவருட கடுங்காவல் என்ற தண்டனையைப் பெற்று, சிறையிலடைக்கும் வயது அவனுக்கு இல்லையென்பதால் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். தன் இலட்சியம் நிறைவேறாமற்போனதால் ஏற்பட்ட வெறுப்பும் கோபமும் அவனுடைய வாழ்க்கையை அங்குக் கடினமாக்கியது. போலீசாரிடம் அடியும் உதையும் வாங்கியும் அவனைச் சீர்திருத்த முடியவில்லை. அதனால், சீர்திருத்த விடுதிக்கு அவன் அனுப்பப்பட்டான்.

விடுதிகாப்பாளரின் உத்தரவுப்படி, மறுநாள் காலை அவ்வூழியரைச் சந்திக்கும்படியாய் அத்துணை விடுதி மாணவர்களும் அணிதிரண்டு வந்தனர். பாடல்களைப் பாடி, தேவனைத் துதித்தும் ஆராதித்தும் மகிழ்ந்தனர். முடிவில் பரிசுப் பொருட்களோடு, ஒவ்வொருவருக்கும் ஒரு வசன அட்டையையும் கொடுத்தார் அவ்வூழியர். மோகனும் அதிலிருந்து ஒரு அட்டையை எடுத்துக் கொண்டான்.அவனுக்குப் படிக்கத் தெரியாததால், அவரிடமே அந்த அட்டையைக் கொடுத்து வாசித்துக் காட்டச்சொன்னான்.

அவரும், "*உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்பாகச் செல்லும்,* ஏசாயா 58:8" என்று வாசித்து, "தம்பி! இயேசுவை உன் இருதயத்தில் ஏற்றுகொள்; அப்பொழுது உன் வாழ்வு துளிர்க்கும்," என்று ஆலோசனை கூறினார்.

அதைக் கேட்ட மோகன் சிந்திக்கத் தொடங்கினான். கடந்தகால பாவங்கள் திரையிலிடப்பட்ட படம்போல் அவன் கண்முன் ஓடியது. அநேகரின் கண்ணீருக்குத் தான் காரணமானதை எண்ணி வருந்தி, இயேசுவிடம் தன் பாவங்களையெல்லாம் அறிக்கை பண்ணினான். அவன் உள்ளத்தில் இயேசு வந்ததால் அவன் சுபாவங்கள் மாறின. விடுதிகாவலரே அதிசயித்தார்.

வாக்குமாறா தேவனும், அவன் மாற்றத்தை அங்கிகரித்தார். சீர்திருத்தப் பள்ளியைப் பார்வையிடவந்த அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்தவர்களிடம் ஆவியானவர் பேசியதால், மோகனைத் தத்து எடுத்துக் கொள்ள முடிவு செய்தனர். தேவன் தன்னோடு பேசின ஏசாயா 58:8 வசனத்தை, மோகன் மீண்டுமாய் நினைவுகூர்ந்தான். தன்னுடைய வாழ்க்கையைத் துளிர்க்கச் செய்ததற்காக, தேவனை அவன் துதித்தான்.

என் அருமைப் பிள்ளைகளே! ஒருவேளை கடந்த வருடத்தின் தோல்விகள் உங்களை அழுத்திக்கொண்டிருந்தாலும், இந்தப் புதிய ஆண்டில் தேவன் நிச்சயமாய் உங்கள் வாழ்வைப் புதிதாக்கி ஆசீர்வதிப்பார். இதற்கோர் சந்தேகமேயில்லை. ஆகவே, திடன்கொள்ளுங்கள்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

விலைமதிப்பற்ற வேதாகமம்

சென்னை, சைதாப்பேட்டையில் அமைந்த கிறிய சிறையில் அடைக்கப் பட்டிருந்த சுப்பிரமணியன் என்ற சிறைக்கைதி, "அந்த நபரை நான் கொலை செய்யாமல் விடமாட்டேன்" என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

கிதியோன் ஊழியத்தின் அங்கத்தினருள் ஒருவரான கிறிஸ்டோபர் சார்லஸ் என்பவர், அச்சிறைக் கைதிகளுக்குப் புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தை வழங்கும்படியாக அங்குச் சென்றார். அங்கிருந்த சிறை அதிகாரி, சுப்பிரமணியன் என்ற அந்தச் சிறைக் கைதியைமட்டும் விடுத்து, மற்ற அனைவருக்கும் வேதாகமத்தை வழங்குமாறு கூறினார். ஆனால், இந்தக் கர்த்தருடைய ஊழியரோ, "அவனுக்கும் கொடுப்பேன்" என்று கூறி, அவனிடம் அதை அளிக்க, அவன் "அதனை அங்கேயே வைத்துவிட்டுப் போ" என்றான் உரத்த குரலில்.

அன்றிரவு அக்கொலைபாதகன், புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தைப் படித்தான். யோவான் 1:9, ரோமர் 8:38,39 ஆகிய வசனங்கள் அவனுள்ளத்தைக் கவர்ந்தன. அவன் தன்னை இயேசுவுக்கு அர்ப்பணித்தான். இயேசுவின் சமாதானத்தையும், பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும் அன்றே பெற்று, இரட்சிக்கப்பட்டான்.

அடுத்த நாள், அக்கைதியான சுப்பிரமணியன் சிறை அதிகாரியிடம் சென்று, கிதியோன் ஊழியரான கிறிஸ்டோபர் சார்லஸை, தான் சந்திக்க விரும்புவதாகக் கோரினான்.

அவனது விருப்பத்திற்கிணங்க, கிறிஸ்டோபர் சார்லஸ் அவனைச் சந்தித்தார். "இப்புத்தகத்தை இரு வாரங்களுக்கு முன்பு என்னிடம் நீங்கள் கொடுத்திருந்திருப்பீர் களானால், நான் என் மனைவியைக் கொன்றிருக்க மாட்டேன்" என்று மிகுந்த துக்கத்தோடு கூறினான். எனினும், "நான் நாளை புழல் சிறைக்குச் செல்லவேண்டியுள்ளது. அங்கு, நான் இயேசுவைக்குறித்தும், விலைமதிப்பற்ற இப்புத்தகத்தைக்குறித்தும் சாட்சி பகருவேன்" என்றான்.

மிருகக்குணம் படைத்த அந்த மனிதனை, தேவ மனிதனாக மாற்றிய இப்புத்தகத்தின் மேன்மைதான் என்னே, என்னே!

- கிதியோன் ஊழியர்

சபையின் செய்திகள்

1. அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை ஊழியர்களின் கூடுகை

2009, டிசம்பர்த்திங்கள் 2 ஆம் நாள், காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை ஊழியர்களின் கூடுகை கூட்டப்பட்டது. துதி ஆராதனைக்குப் பின்னர், தலைமைப் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், சங்கீதம் 134:1, 135:1 வசனங்களை மையமாகக்கொண்டு, "கர்த்தருடைய ஊழியர்கள் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டும்" என்றுள்ள தலைப்பில் ஏழு குறிப்புகளை வழங்கினார்.

ஊழியத்திற்கென தங்களை ஏற்படுத்தினமைக்காக (1 தீமோ.1:12); கர்த்தர் தங்களுக்கு அனுதினமும் வழங்கும் அதிகாரத்திற்காக (அப்.27:33-36); விசுவாசிகள் உபதேச சட்டங்களுக்குத் தங்கள்வாயிலாகக் கீழ்ப்படிந்து வாழ்வதற்காக (ரோமர் 6:17); தேவன் தங்களுக்கு அருளிய விசுவாசத்திற்காக (லூக்கா 1:68); தங்களது வெற்றி வாழ்க்கைகாக (2 கொரி.2:14); தங்களது சுத்த மனச்சாட்சிக்காக, ஊழியர்கள் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டும் (2 தீமோ.1:14) என்று அழகாக எடுத்துரைத்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்துக்குப் பின்னர், தலைமைப் போதகரின் ஆசீர்வாத ஜெபம் முடிந்து, மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிந்தது.

2. அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் தென்னிந்திய கிளைச்சபைப் போதகர்களுடன் தலைமைச் சபை ஊழியர்களும் இணைந்த கூடுகை

2009, டிசம்பர்த் திங்கள் 7 ஆம் நாள், காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தென்னிந்திய கிளைச் சபைப் போதகர்களும், அவர்களது துணைவியர்களும், அவர்களது சபை மூப்பர்களும், தலைமைச் சபை ஊழியர்களும் இணைந்து கூடினர்.

துதி ஆராதனையைப் போதகர் தாமஸ் ராஜ் அவர்கள் ஏற்று நடத்திய பின்னர், தலைமைச் சபை போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், ரோமர் 1:1 ஐ மையமாகக்கொண்டு, "கிறிஸ்துவின் ஊழியர்கள் யார்?" என்ற தலைப்பில் செய்தியளித்தார்.

மனிதரைப் பிரியப்படுத்தாது, தேவனை மட்டுமே பிரியப்படுத்துபவன் (கலா.1:10); புறஜாதிகளுக்குச் சுவிசேஷம் அறிவிப்பவன் (ரோமர் 15:15,16); தேவனுக்குக் கணக்கு ஒப்புவிப்பவன் (1 கொரி.4:1-4); பாடுகளை, உபத்திரவங்களைச் சாந்தத்தோடும் பொறுமையோடும் சகிப்பவன் (2 கொரி.11:23-33); தான் பிரசங்கிப்பதைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடிப்பவன் (1 தீமோ.4:6) கிறிஸ்துவின் உண்மை ஊழியனாவான் என்றுள்ள ஐந்து குறிப்புகளை அழகுற எடுத்து விளக்கினார்.

பின்னர், கிளைச் சபை ஊழியர்களின் குழந்தைகள் பிரதிஷ்டிக்கப்பட்டனர். தேவ ஊழியஞ்செய்யும்படி சிலரும் பிரித்தெடுக்கப் பட்டனர். ஊழியர்களுள் சிலர் ஞானஸ்நானம் கொடுக்கவும், திருவிருந்து கொடுக்கவும் பிரதிஷ்டிக்கப்பட்டனர். திருவிருந்து ஆராதனை முடிந்தபின்னர், தலைமைப் போதகரது ஆசீர்வாத ஜெபத்தோடு கூட்டம் முடிந்து, மதிய உணவும் வழங்கப்பட்டது.

செய்திகள்

பதவி உயர்வில் இடஒதுக்கீடு வங்கிகளில் அமல்படுத்த ஐகோர்ட் உத்தரவு

மனுக்களை விசாரித்த 'டிவிஷன் பெஞ்ச்' பிறப்பித்த உத்தரவு:

வெவ்வேறு நிலைகளில் உள்ள ஆதிதிராவிட மற்றும்பழங்குடியின ஊழியர்களின் விவரங்களை அளிக்குமாறு வங்கிகள் தரப்பில் கேட்டோம். வங்கிகளில் பணியாற்றும் இவர்கள் திறமையற்றவர்கள்போல் தோற்றம் கொடுக்கப்பட்டது. இவர்கள் பதவி உயர்வு பெறத் தகுதியில்லை, திறமையற்றவர்கள் என வங்கிகள் தரப்பில் பொதுவான வாதம் வைக்கப்படுவதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அனைத்து நிலைகளிலும் பதவி உயர்வில் இடஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும் என, வங்கிகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதை அமல்படுத்துவதில் வங்கிகளுக்கு எந்த இடையூறும் இல்லை. ஆனால், மத்திய அரசின் உத்தரவை அமல்படுத்தாமல் வங்கிகள் பிடிவாதம் செய்கின்றன.

அரசியலமைப்புச் சட்டம், அடித்தட்டு மக்களுக்குக் கூடுதல் பாதுகாப்பை வழங்குகிறது. எனவே, எந்தக் காரணமும் இல்லாமல் பதவி உயர்வில் இடஒதுக்கீட்டை வழங்காதது நியாயமற்றது. இந்த அப்பீல் மனுக்கள் ஏற்கப்படுகின்றன. தனி நீதிபதியின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மத்திய அரசு, 1977 ஆம் ஆண்டு பிறப்பித்த உத்தரவை, எட்டு வாரங்களில் வங்கிகள் அமல்படுத்த வேண்டும். இவ்வாறு 'டிவிஷன் பெஞ்ச்' உத்தரவிட்டுள்ளது.

(தினமலர் 11-12-2009)

TRUST

"I cannot know why suddenly the storm
should rage so fiercely round me in its wrath;
But this I know - God watches all my paths,
And I can trust."

"I may not draw aside the mystic veil
that hides the unknown future from my sight,
Nor know if for me waits the dark or light;
But I can trust."

"I have no power to look across the tide,
To see while here the land beyond the river;
But this I know - I shall be God's forever;
So I can trust."

விடுதலைத்தூதன்
வாசகர்கள் அனைவருக்கும்
எங்களது இதயங்கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

2010

Reg.Number TN/CCN/385/09-11. Licence to the post under WPP No.TN.CCN.85/09-11
Regd.Under Regis.of News paper for India No. 1295/57, Posting date 29th & 30th of every month.
Date of Publication: monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai - 600 008.

ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்

Book - Rs.5

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சிகள்
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. எஸ்தர்
6. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
7. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
8. ஆவிக்குரிய வேதசத்தியங்கள்
9. தசமபாகங்கள் கர்த்தருக்கு உரியன
10. எனது அநுபவங்கள்
11. Jesus Met Me in Jail
12. Spiritual Truths from the Bible
13. Tithes belong to the Lord
14. My Experiences

Book-Rs.10/-

15. அநாதி கிருபை
16. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
17. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
18. நீதிமான்கள்
19. கிறிஸ்துமஸ் செய்திகள்
20. இயேசு உயிர்த்தெழுந்தார்
21. நீதியின் சூரியன்
22. பரதேசிகளாகிய நாம்
23. கிறிஸ்தவ குடும்பம்
24. நித்திய பிரதான ஆசாரியர்
25. சபை சபைதானா?
26. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
27. புத்தாண்டு தேவசெய்திகள்
28. விழித்திரு
29. சிலுவைக்கு அப்பால்
30. வணக்கம்
31. இரட்சிப்பின் சாட்சிகள்
32. ஜீவனுள்ள சாட்சிகள்
33. அற்புத சாட்சிகள்
34. சாட்சிகள்
35. எரி நரகத்திற்குத் தப்பினேன்
36. மாபெரும் மாற்றம்
37. நன்றியுள்ள சாட்சிகள்
38. கல்லூரியில் அற்புதங்கள்
39. நற்செய்தி கதைகள்
40. தீப ஒளி
41. வழிகாட்டும் கதைகள்
42. அந்தக் கடிதங்கள்
43. அந்த மயில்கள்
44. கனமான ஊழியம்
45. வெளிச்சம்
46. ஐக்கியம்
47. இன்னும் சந்தேகமா?
48. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
49. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
50. மேய்ப்பரின் அறிவுரைகள்
51. முதலாம் ஆதாம்
52. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
53. நீரே என் மேய்ப்பர்
54. தேவ ஊழியம்
55. உத்தம ஊழியன்
56. Eternal Grace
57. The Star
58. The New Year
59. Spiritual Questions
60. The Timely Warning
61. The Blessing
62. Your Response to the Cross
63. The Power of Prayer
64. Springs in the Valley
65. A Narrow Escape from Hell

Book-Rs.15/-

66. ஏழு வார்த்தைகள்
67. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
68. இயேசு கூறின உவமைகள்
69. அதிசயமான தேவகிருபை
70. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 4
71. Amazing Grace of God

Book - Rs.20/-

72. என் நேசரின் சத்தம்
73. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள்
74. வாக்குத்தத்த செய்திகள் 2004
75. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 1
76. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 2
77. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
78. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
79. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 1
80. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 2
81. ஒருவருக்கொருவர்
82. Successful Ministers of the Lord
83. Messages of God's Blessings 1
84. Messages of God's Blessings 2

Book - Rs.25/-

85. A Good Soldier of Jesus Christ
86. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
87. வாக்குத்தத்தச் செய்திகள் 2005
88. வாக்குத்தத்தச் செய்திகள் 2006
89. தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
90. வாக்குத்தத்தச் செய்திகள் 2007
91. ஜெபத்தின் வல்லமை

Book - Rs.30/-

92. நல்ல போர்ச்சேவகன்
93. ஆவிக்குரிய தேவசெய்திகள்

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி

24hrs Prayer line:
26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622775 Website: www.acaprayerhouse.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org

Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell:9841429079